المملكة العربية السعودية
وزارة التعليم العالي
الجامعة الإسلامية بالمدينة المنورة
عمادة البحث العلمي
قسم الترجمة

www.iu.edu.sa

# التعريف الموجز بالإسلام

## باللغة التاميلية

ترجمه عبد الغفور محمد جليل

உயர் கல்வி அமைச்சு .
இஸ்லாமியப் பல்கலைக் கழகம் .
அறிவியல் ஆய்வு மையம் .
மொழி பெயர்ப்புப் பகுதி .
சவூதி அரேபியா .
அல் –மதீனா .

www.iu.edu.sa

# இஸ்லாம்ஓர் அறிமுகம் .

தமிழில் ...

அப்துல் கபூர் முஹம்மது ஜெலீல் .

அறிவியல் ஆய்வு மைய வெளியீடு

التعريف الموجز بالإسلام

باللغة التاميلية

ⓗ الجامعة الإسلاميّة، 1424هـ

*فهرس مكتبة الملك فهد الوطنّية أثناء النشر*

*مجموعة من الباحثين بعمادة البحث العلمي*

*المدينة المنورة 1424هـ*

*التعريف الموجز بالإسلام / مترجم* إلى اللغة التاميلية

ترجمه إلى اللغة التاميلية/ عبد الغفور محمد جليل

24ص، 24×17 سم

ردمك: 0- 421 -9960

(النص بالتاميلية)

1-أركان الإسلام 2- أركان الإيمان (الإسلام) العنوان

ديوي 211 1424/2390

رقم الإيداع: 1424/2390

ردمك : 0- 421-02-9960

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் .

## முன்னுரை.

புனித இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவதற்கு விரும்பிய சில அயாகளுக்கு மாத்திரம் அருள் பாலித்து , அவனைப் புறக்கணித்து வாழ்ந்தோரை வழி கேட்டில் வீழ்த்தி இருளிலே தத்தளிக்க வத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும் . ஸலவாத்தும் ஸலாமும் உலகத்தோர் அனைவருக்கும் அருளாகவும் , நபிமார்களில் இறுதியாகவும் , மக்கள் அனைவருக்கும் நற்சோபனம் கூறுபவராகவும் , அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் , அல்லாஹ்வின் அனுமதி பெற்று அவன் பால் அழைக்கும் அழைப்பாளராகவும் ஒளி வீசும் விளக்காகவும் அனுப்பப்பட்ட முஹம்மது பின் அப்துல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உண்டாகட்டும் .

ஆல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

“ எவர் இஸ்லாம் அல்லாத வேறொரு மார்க்கத்தை தனது சமயமாக ஆக்கிக் கொள்கின்றாறோ அது அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது . மேலும் அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில் உள்ளவராக ஆகி விடுவார் .”

( ஆல இம்ரான் 85 ம் வசனம் )

எனவேதான் அல்லாஹ் இஸ்லாம் அல்லாத அனைத்து மார்க்கங்களும் நிராகரிக்கப்பட்டவைகளே எனத் தெளிவு படுத்தியுள்ளான் . அவற்றைத் தழுவுபவர்கள் நஷஹட் வாளிகள் , தம்மைத் தாமே அழித்துக் கொள்பவர்கள் .

எனினும் இன்று நாம் வரமும் காலத்தில் இருக்கும் அனேக மக்கள் காபிர்களாகவும் வழிகேட்டில் வீழ்ந்தவர்களாவுமெ காணப்படுகின்றனர் . யூதர்கள் , கிருஷ்துவர்கள் , பௌத்தர்கள் , ஹிந்துக்கள் , சுயோனிஸ வாதிகள் நாஷ்தியர்கள் இன்னும் பல்வேறுவிதமான பெயர்களில் காபிர்களாகவே காணப்படுகின்றனர் .

எனவேதான் அல்லாஹ்வின் அருள்பெற்று நேர்வழியடைந்து இஸ்லாமிய அறிவு பெற்ற முஸ்லிம்கள் மேற்படி மக்களுக்கு

இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்து அவர்கள் முன்னிலையில் இஸ்லாத்தின் அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பது கடமையாகும் . அதன் மூலம் அவர்கள் நேர்வழி பெற்று புனிதஇஸ்லாத்தைத் தழுவி விடக் கூடும் .
த.்.வாப்பணியின் ஆரம்பப்படித்தரமாக அம்மக்களுக்கு நாம் அழைப்பு விடுக்கும் இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகத்தை அவர்களுக்கு முன் வைக்கவேண்டியிருப்பதால் இச்சிறிய கையேடு இஸலாம் பற்றி சிறியதொரு அறிமுகத்தை முன்வைக்கப் போதுமானது . அல்லாஹ் இதனைப் பிரயோசனமுள்ளதாக்கி இதன் மூலம் மூடிக்கிடக்கும் இதயங்களுக்கும் , அடைக்கப்படட்டிருக்கும் செவிகளுக்கும் , குருடாயிருக்கும் விழிகளுக்கும் நேர்வழி காட்டி விடக் கூடும் .

இது ஒருபுறமிருக்க — எங்களது முஸ்லிம் சமுதாயத்திலேயே புதிதாக இஸ்லாத்தை ஏற்ற பலர் இருக்கின்றனர் . இக்கையேடு சிறிதாயிருப்பினும் கூட அவர்களுக்கும் தமது மார்க்க விடயங்களை அறிய இவ்வேடு உதவி செய்யும் . அதன் மூலம் இஸ்லாம் அவர்களது அடி மனதில் பதிந்து கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக அவர்கள் மாறக் கூடும் . அதன் பின் அவர்களும் இஸ்லாமிய ஜிஹாதின் கொடியை ஏந்தி தம்மைச் சூழுவம் தமக்குப் பின்னும் உள்ள மக்களுக்கும் அவர்கள் இஸ்லாமிய அழைப்புப்பணி செய்ய ஆரம்பித்து விடுவார்கள் . எல்லாநன்மைகளும் இறைவன் கைவசமே உள்ளன . அவன் நாடிவர்களுக்கே அவற்றைக் கொடுப்பான் .

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே .

அறிவியல் ஆய்வு மையம் .
மதீனா .

# பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் .

# முன்னுரை

புனித இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவதற்கு விரும்பிய சில அடியார்களுக்கு மாத்திரம் அருள் பாலித்து , அவனைப் புறக்கணித்து வாழ்ந்தோரை வழி கேட்டில் வீழ்த்தி இருளிலே தத்தளிக்க வைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும் . ஸலவாத்தும் ஸலாமும் உலகத்தோர் அனைவருக்கும் அருளாகவும் , நபிமார்களில் இறுதியாகவும் , மக்கள் அனைவருக்கும் நற்சோபனம் கூறுபவராகவும் , அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் , அல்லாஹ்வின் அனுமதி பெற்று அவன் பால் அழைக்கும் அழைப்பாளராகவும் ஒளி வீசும் விளக்காகவும் அனுப்பப்பட்ட முஹம்மது பின் அப்துல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உண்டாகட்டும் .

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

“ எவர் இஸ்லாம் அல்லாத வேறொரு மார்க்கத்தை தனது சமயமாக ஆக்கிக் கொள்கின்றாரோ அது அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது . மேலும் அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில் உள்ளவராக ஆகி வீடுவார் .”

( ஆல இம்ரான் 85 ம் வசனம் )

எனவேதான் அல்லாஹ் இஸ்லாம் அல்லாத அனைத்து மார்க்கங்களும் நிராகரிக்கப்பட்டவைகளே எனத் தெளிவு படுத்தியுள்ளான் . அவற்றைத் தழுவுபவர்கள் குற்ற வாளிகள் , தம்மைத் தாமே அழித்துக் கொள்பவர்கள் .

எனினும் இன்று நாம் வரமும் காலத்தில் இருக்கும் அனேக மக்கள் காபிர்களாகவும் வழிகேட்டில் வீழ்ந்தவர்களாவுமே காணப்படுகின்றனர் . யூதர்கள் , கிருஷ்துவர்கள் , பௌத்தர்கள் , ஹிந்துக்கள் , சுயோனிஸ வாதிகள் நாஷ்தியர்கள் இன்னும் பல்வேறு விதமான பெயர்களில் காபிர்களாகவே காணப் படுகின்றனர் .
எனவேதான் அல்லாஹ்வின் அருள்பெற்று நேர்வழியடைந்து இஸ்லாமிய அறிவு பெற்ற முஸ்லிம்கள் மேற்படி மக்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்து அவர்கள் முன்னிலையில் இஸ்லாத்தின் அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பது கடமையாகும் . அதன் மூலம் அவர்கள் நேர்வழி பெற்று புனிதஇஸ்லாத்தைத் தழுவி விடக் கூடும் .
த.ஃவாப்பணியின் ஆரம்பப்படித்தரமாக அம்மக்களுக்கு நாம் அழைப்பு விடுக்கும் இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகத்தை அவர்களுக்கு முன் வைக்கவேண்டியிருப்பதால் இச்சிறிய கையேடு இஸ்லாம் பற்றி சிறியதொரு அறிமுகத்தை முன்வைக்கப் போதுமானது . அல்லாஹ் இதனைப் பிரயோசனமுள்ளதாக்கி இதன் மூலம் மூடிக்கிடக்கும் இதயங்களுக்கும் , அடைக்கப்படட்டிருக்கும் செவிகளுக்கும் , குருடாயிருக்கும் விழிகளுக்கும் நேர்வழி காட்டி விடக் கூடும் .

இது ஒருபுறமிருக்க – எங்களது முஸ்லிம் சமுதாயத்திலேயே புதிதாக இஸ்லாத்தை ஏற்ற பலர் இருக்கின்றனர் . இக்கையேடு சிறிதாயிருப்பினும் கூட அவர்களுக்கும் தமது மார்க்க விடயங்களை அறிய இவ்வேடு உதவி செய்யும் . அதன் மூலம் இஸ்லாம் அவர்களது அடி மனதில் பதிந்து கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக அவர்கள் மாறக் கூடும் . அதன் பின் அவர்களும் இஸ்லாமிய ஜிஹாதின் கொடியை ஏந்தி

தம்மைச் சுற்றியும் தமக்குப் பின்னும் உள்ள மக்களுக்கும் அவர்கள் இஸ்லாமிய அழைப்புப்பணி செய்ய ஆரம்பித்து விடுவார்கள் . எல்லாநன்மைகளும் இறைவன் கைவசமே உள்ளன . அவன் நாடிவர்களுக்கே அவற்றைக் கொடுப்பான் .

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே .

அறிவியல் ஆய்வு மையம் .
மதீனா .

# இஸ்லாம் ஓர் அறிமுகம்.

புகழனைத்தும் சர்வ உலக இரட்சகனாகிய வல்ல அல்லாஹுத்தஆலாவுக்கே உண்டாகட்டும் . சாந்தியும் சமாதானமும் சத்தியத்தூதர் நபிமார்களின் தலைவர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது வழிமுறையைப் பின்பற்றி வாழ்ந்த உறவினர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக .

இஸ்லாம் என்ற சொல்லின் அர்த்தத்தை முதலில் நாம் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும் . அதன் அர்த்தமாவது...

உலகில் உண்மையாக வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை எனவும் முஹம்மது நபியவர்கள் உன்மையான தூதராவார்கள் எனவும் இதயத்தால் உறுதி கொண்டு நாவினால் மொழிந்து பின் அதற்கேற்ப இஸ்லாத்தைப் பின் பற்றி நடப்பதைக் குறிக்கும் . இந்த நம்பிக்கையானது ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விடயங்களையும் இஸ்லாத்தின் ஆறு அடிப்படை அம்சங்களையும் இதய சுத்தியுடன் ஏற்று நடக்குமாறு எம்மைப் பணிக்கின்றது .

இந்த இஸ்லாம் அல்லாஹுத்தஆலா முஹம்மது நபிக்கு அருளிய இறுதி வேதமாகும் .இது தான் சத்திய மார்க்கம் . இதைத்

தவிர வேறு எந்த மார்க்கத்தைப் பின்பற்றுவதையும் அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான் . மேலும் அல்லாஹ் இந்த மார்க்கத்தை நடைமுறைப்படுத்த இலகுவானதாகவும் ,எவ்வித சிரமமுமற்ற அனைவரும் பின்பற்றி நடக்கக் கூடியதாகவும் அமைத்துள்ளமை இம்மார்க்கத்திற்கே உரிய தனிச் சிறப்பம்சமாகும் ஏனெனில் இம்மார்க்கத்தையுடையவர்கள் நிறைவேற்ற முடியாதளவுக்கு சிரமமான வழிபாடுகளோ, சக்திக்கப்பாற்பட்ட கிரியைகளோ எதுவுமே இதில் கிடையாது .

இந்த சத்திய மார்க்கத்தின் ஆணிவேராகத் திகழ்வது ஓரிறைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகும் . மேலும் இம்மார்க்கம் சத்தியத்தை இலட்சியமாகவும் நீதி நியாயத்தை மையக்கல்லாகவும் யதார்த்தத்தை அதன் அடிப்படையாகவும் , ஜீவ காருண்யத்தை அதன் ஜீவ நாடியாகவும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது . எனவே இம்மார்க்கம் உலக மக்கள் அனைவருமே பின்பற்ற வேண்டிய ஓர் அரிய மார்க்கமாகும் . ஏனெனில் இம்மார்க்கம் முழு மனித வர்க்கத்தினரையும் ஆத்மீக , லௌகீக விடயங்கள் அனைத்திலும் வெற்றியடைந்திடத் தக்க ஒரு செம்மையான பாதையிலேயே இட்டுச் செல்கின்றது . மனித வர்க்கத்திற்கு ஆத்மீக லௌகீக ரீதியாக ஊறு விளைவிக்ககூடிய அனைத்து விடயங்களை விட்டும் விலகியிருக்க வேண்டுமெனப்பணிக்கின்றது .

இந்த மார்க்கத்தின் மூலமே அல்லாஹுத்தஆலா ( வன்நெஞ்சமிக்க முறட்டுத்தனமான )ஒரு சமுதாயத்தை சீரிய பண்பாளர்களாக நேரிய கோட்பாடு டையவர்களாக ( நாடாளும் மன்னர்களாக மாற்றியமைத்தான் . வஞ்சகமும் கொடூர குணமும் குடி கொண்டிருந்த சிதறிக் கிடந்த உள்ளங்களை – தான்தோன்றித்தனமாக செயற்பட்ட இதயங்களை சுத்தி செய்து இருளகற்றி நேர்வழியில் வீறு நடைபோடச் செய்தான்

மேலும் இந்த சன் மார்க்கம் மிக நுண்ணிய முறையில் நெறிப்படுத்தப்பட்டு எவ்வித குறைபாடுகளுமேயின்றி பலமாக நிறுவப்பட்டுள்ளது . அது கூறும் செய்திகள் , சட்டதிட்டங்கள் அனைத்தும் சத்தியமானவை . அதன் தகவல்கள் அனைத்திலும் உன்மை தவழ்கின்றது . அதன் சட்டவிதிகளிலே நீதி பளிச்சிடுகின்றது .இஸ்லாத்தின் இறை கொள்கை , கொடுக்கல் வாங்கல் , பண்பாடு , ஒழுக்கவியல் போன்ற இன்னோரன்ன அனைத்துக் கோணங்களிலும் இத்தனிப்பண்பு மிளிர்வதை அனைவரும் அவதானிக்க முடியும் .

எனவே இஸ்லாம் எனும் இறைத்தூது பின்வரும்மூன்று விடயங்கள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதை தனது இலக்காகக் கொண்டுள்ளது .

1 –மக்களின் இரட்சகனான அல்லாஹ்வை அவனது அழகிய பெயர் நாமங்கள் மூலமும் அவனுக்கேயுரிய தனிப்பண்புகள் மூலமும் , எவராலும் செய்து காட்ட முடியாத அவனுக்கேயுரிய பேராற்றல்மிகு செயற்பாடுகளை எடுத்துக் கூறுவதன் மூலமும் அனைத்து மக்களுக்கும் அறிமுகப் படுத்தி அவன் மாத்திரமே தலை குனிந்து வணங்கப்படுவதற்கு தகுதி மிக்கவன் எனும் கோட்பாட்டை மக்கள் மனதில் ஆழப்பதித்து வைத்தல் .

உ – அனைத்து மக்களும் இணை துணையற்ற ஏக அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டுமென அவர்களுக்கு அழைப்பு விடுத்தல் . இறை வணக்கம் எனப்படுவது அல்குர்ஆனிலும் நபி வழியிலும் போதிக்கப்பட்ட கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழ்வதையும் , மனிதன் உலக –மறுவுலக வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்காக அவற்றில் தடை செய்யப்பட்டுள்ள வை களைத் தவிர்ந்து வாழ்வதையும் குறிக்கும் .

3 – மரணத்தின் பின் மனிதன் சந்திக்கவிருக்கும் விடயங்கள் , கப்ர் – புதை குழியிலே அவன் சந்திக்கவிருக்கும் விடயங்கள் ,மீண்டுமொரு முறை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அவன் உயிர் கொடுத்தெழுப்பப்படுதல் , உலகில் அவன் புரிந்த செயல்கள் பற்றி விசாரிக்கப்பட்டு அதற்கேற்ப அவன் சுவர்க்கத்திற்கோ அன்றேல் நரகத்திற்கோ செல்வதை நினைவூட்டல் போன்றவற்றைத் தாங்கி நிற்கின்றது .

இஸ்லாம் நிறுவப்பட்டுள்ள அடிப்படை விடயங்களை ...

1 – ஈமானிய கடமைகள் .

2 – இஸ்லாமிய கடமைகள் .

3 – இக்லாஸ் ( மனத்தூய்மை ).

என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் . இவை பற்றி சற்று விரிவாக அறிந்து கொள்வது மிக அவசியமாகும் .

## ஈமானிய கடமைகள் .

ஒவ்வொரு முஸ்லிமும் அவனது இஸ்லாமிய நம்பிக்கையைப் பொறுத்த வரை ஆறு வீடயங்களை நப்பிக்கை கொள்ள வேண்டியது அவசியமாகும் அவையாவன ...

1 – அல்லாஹ் என்று ஒரே கடவுள் இருப்பதாக நம்பிக்கை கொள்ளல் . இந்த நம்பிக்கையானது மூன்று அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றது .

அ –அல்லாஹ்வே இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன் . அதை நிர்வகிப்பவன் . இப்பிரபஞ்சத்தின் அனைத்துப் பொருட்களுக்கும் சொந்தக் காரன் . அதன் அனைத்து செயற்பாடுகளுக்கும்

பொறுப்பானவன் . அனைத்தும் அவனது கட்டளைப்படியே செயற்படுகின்றன என நம்பிக்கை கொள்ளுதல் .

ஆ – அல்லாஹ் மாத்திரமே உண்மையில் மனிதன் தலைகுனிந்து வணங்குவதற்குத் தகுதி படைத்தவன் . மனிதனால் வணங்கி பூசிக்கப்படும் அவனல்லாத ஏனைய கடவுள்கள் போலியானவையே . நாம் தலைகுனிந்து வணங்குவதற்குத் தகுதியற்றவையே என்ற ஆழமான நம்பிக்கையை அடிமனதில் உருவாக்கல் .

இ – அல்லாஹ்வுக்கென சில தனிப்பட்ட அழகிய பெயர் நாமங்களும் தனிப்பட்ட சில உயரிய குணாதிசயங்களும் உள்ளன . அது போன்ற பூரணத்துவம் பெற்ற பண்புகள் படைப்பினங்களில் யாருக்கும் இல்லை . அவை அல்குர்ஆனிலும் நபிவழித் தொகுப்பிலும் கூறப்பட்டுள்ளன என்று நம்புதல் வேண்டும் .

## உ – மலக்குகள் ( வானவர்கள் ) பற்றிய நம்பிக்கை .

மலக்குகளைப் பொறுத்த வரை அவர்கள் அல்லாஹ்வின் கண்ணியமிக்க அடியார்கள் . அல்லாஹ்வே அவர்களையும் படைத்தான் . அவர்கள் அல்லாஹ்வை சதாவும் வணங்கிக் கொண்டிருக்கின்றனர் .அவனது கட்டளைளகளுக்கு சதா அடிபணிந்து நடக்கின்றனர் . அல்லாஹ் அவர்களுக்கு பல்வேறு கட்டளைகளைக் கொடுத்து அவற்றைச் செயற்படுத்துமாறு

அவர்களைப் பணித்துள்ளான் .அவர்களில் பின் வருவோர் முக்கியமானவர்களாகக் கருதப்படுவார்கள் .

1 —ஜிப்ரீல் ( அலை) ... இவர்கள் அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கு வஹீ எனும் வேதக்கட்டளைகளைக் கொண்டு வந்து கொடுப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் . அந்த வஹீயை அல்லாஹ் சுட்டிக் காட்டிய நபியிடம் எடுத்துக் கூறுவார்கள் .

உ — மீக்காயீல் ... இவர்கள் மழை பொழிவித்தல் பயிர்களை முளைப்பித்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் .

3 — இஸ்ராபீல் ... இவர்கள் யுக முடிவு நாளின் அறிகுறியாக ஸூர் எனும் குழலை ஊதுவதற்குப் பொறுப்பானவர்கள்

4 — மலக்குல் மௌத் ( உயிர் வாங்கும் மலக்கு .) இவர்கள் உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தினதும் உயிர்களைக் கைப்பற்றுவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்கள் .

ஈமானின் மூன்றாவது அடிப்படை

# வேதங்களைப் பற்றிய நம்பிக்கை .

ஆல்லாஹூத்தஆலா மக்களை நேர்வழிப்படுத்தவும் அவர்களுக்கு சீரான வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கும் தனது நபிமார்களுக்கு வேதங்களை அருளினான் . அவற்றில் பின்வரும் வேதங்களை நாம் முக்கியம் அறிந்து வைத்திருக்க வேண்டும் .

1 – அத்தவ்ராத் ... இவ்வேதத்தை அல்லாஹ் நபி மூஸா (அலை ) அவர்களுக்கு அருளினான் .இது பனூஇஸ்ரவேலர்களுக்கு அருளப்பட்ட வேதங்களில் மிகச் சிறந்ததொரு வேதமாகும் .

உ – அஸ்ஸபூர் ... நபி தாவூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இவ்வேதத்தை அருளினான் .

3 – அல் இன்ஜீல் ...நபி ஈஸா (அலை ) அவர்களுக்கு அல்லாஹ் இவ் வேதத்தை அருளினான் .

4 – ஸூஹூபுகள் .. இவ் வேதக்கட்டளைகள் நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அருளினான்.

5 – அல்குர்ஆன் ...இந்த அல்குர்ஆனைத்தனது இறுதித் தூதரான முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளினான் . இவ்வேதத்தின் மூலம் இதற்கு முன் அருளப்பட்ட அனைத்து வேதங்களையும் மாற்றியமைத்து விட்டான் . அத்துடன் இவ்வல்குர்ஆனை இறுதி வரை பாதுகாப்பதாகவும் வாக்களித்துள்ளான் .எனவே

இவ்வல்குர்ஆன் மனித கோடிகளுக்கு வழிகாட்டியாக யுக முடிவு நாள் வரை நிலைத்திருக்கும் .

ஈமான் கொள்ள வேண்டிய நான்காவது அம்சம்.

## நபிமார்கள் பற்றிய நம்பிக்கை .

சர்வலோக இரட்சகனான அல்லாஹ் தனது படைப்பினங்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு காலகட்டத்திலும் நபிமார்களை இறைத் தூதுவர்களாக அனுப்பி வைத்தான் . அவ்வாறு அனுப்பப்பட்ட முதல் றஸூல் நபி நூஹ் (அலை) அவர்களாவார்கள் . இறுதித் தூதர் நபி முஹம்மது (ஸல்) அவர்களாவார்கள் . நபி ஈஸா (அலை) , உஸைர் (அலை) அவர்கள் உட்பட அனைத்து நபிமார்களும் எம்மைப் போன்ற மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே .அவர்களையும் அல்லாஹ்தான் சிருஷ்டித்தான் .அல்லாஹ்வுக்கே உரித்தான இறை சக்திகளில் .அல்லாஹ்வுக்கே உரித்தான இறை வல்லமைகளில் இவர்களுக்கு எவ்வித பங்குமில்லை .

அவர்களும் அல்லாஹ்வின் அடியார்களே . எனினும் அல்லாஹ் “ ரிஸாலத் “ எனும் தூது மூலம் அவர்களை ஏனைய மனிதர்களை விட கண்ணியப்படுத்தியிருக்கின்றான் . அவன் தனது தூதுப் பணியினை நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மூலம் நிறைவு செய்து கொண்டான் . யுக முடிவு நாள் வரைக்கும் தோன்றும் அனைத்து மனித கோடிகளுக்கும் அவர்களையே நபியாக நியமித்து

விட்டான் . எனவே அவர்களுக்குப் பின்னர் எந்த நபியும் வரப்போவதில்லை .

ஈமானின் ஐந்தாவதுஅம்சம் .

## யுக முடிவு நாள் பற்றிய நம்பிக்கை

இவ்வுலகமும் அதிலுள்ள அனைத்து படைப்பினங்களும் என்றோ ஒரு நாள் முற்றாக அழிக்கப்பட்டு விடும் . பின்னர் அப்படைப்பினங்களை அல்லாஹ் மீண்டும் உயிர்ப்பிப்பான் . அவ்வேளை மனிதர்கள் அனைவரும் அவரவர் மரணித்த இடத்திலிருந்து மீண்டும் உயிர் பெற்று எழுந்து நிற்பார்கள் .பின்னர் தாம் செய்த செயல்களுக்கு ஏற்ப இன்பம் நிறைந்த சுவர்க்கத்திற்கோ , அன்றேல் வேதனையும் மிகுந்த நரகத்திற்கோ செல்வார்கள் .

இந்த மறுமை நாள் பற்றிய நம்பிக்கையானது மனிதன் தன் மரணத்தின் பின் சந்திப்பவைகளான புதைகுழியில் நிகழும் ஆச்சரியங்கள்,மீண்டும் உயிர்ப்பிக்கப்படல் ,உலகில் அவன் புரிந்த செயல்கள் பற்றிய விசாரணை ,பின் அவனது செயல்களுக்கேற்ப

சுவர்கம் அல்லது நரகம் செல்லல் போன்ற அனைத்து விடயங்களையும் நம்புவதை உள்ளடக்கிக் கொள்கிறது .

ஈமானின் ஆறாவது அம்சம் .

## கழா – இறை வீதி பற்றிய நம்பிக்கை .

இறை முன்னேற்பாடு பற்றிய நம்பிக்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றது.

அல்லாஹுத்தஆலா இப்பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு முன்னரே அதில் நடக்கவிருக்கும் அனைத்து விடயங்களையும் –எப்போது எப்படி நடக்கும் எனத்தீர்மானித்து விட்டான் .அந்த முன்னேற்பாட்டின் படியே இந்த உலகத்தையும் அதிலுள்ள படைப்பினங்களையும் உருவாக்கினான் .இப்படைப்பினங்கள் அனைத்தும் புரியவிருக்கும் அனைத்து செயற்பாடுகளும் அல்லாஹ்வின் ஆரம்பமற்ற பூர்வீக அறிவின் மூலம் அவனிடமுள்ள “ லவ்ஹ்” எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் பதிவு செய்யப்பட்டவைகளே . அல்லாஹ் எவற்றைப் படைக்க விரும்பினானோ அவற்றையெல்லாம் தனது ஆற்றலினால் உருவாக்கினான் . இப்பிரபஞ்சத்தில் உள்ள எப்பொருளும் அவனது

விருப்பத்தின் பேரில் அவனது ஆற்றலினால் உருவாக்கப்பட்டவைகளே ..

# இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் .

புனித இஸ்லாம் மார்க்கமானது அடிப்படை விடயங்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது ஒரு மனிதன் இந்த ஐந்து விடயங்களையும் ஏற்றுஅவற்றைச் செவ்வனே கடைப்பிடித்தொழுகும் போதே அவன் “முஸ்லிம்” என்ற பெயரைப் பெற்றுக் கொள்கின்றான் .

இஸ்லாத்தின் முதலாவது அடிப்படைக்கோட்பாடு .

## அத் தவ்ஹீத் – ஓரிறைக் கொள்கை.

தலை குனிந்து வணங்குவதற்குத் தகுதியானவன் வல்ல அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை . நபி முஹம்மது (ஸல்)

அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சி சொல்லுதல் .

இவ்வாறு சாட்சி சொல்வதே ஒருவர் இஸ்லாத்தில் நுழைவதற்குச் செய்யவேண்டிய முதல் அம்சமாகும் . இந்த வாசகத்தின் அடிப்படையிலேயே இஸ்லாத்தின் ஏனைய கடமைகள் அமைக்கப்பட்டுள்ளன . இந்த நம்பிக்கையின்றிப் புரியப்படும் இஸ்லாத்தின் ஏனைய இபாதத்களுக்கு எவ்வித பெறுமதியும் கிடையாது .

இந்த "லாஇலாஹ இல்லல்லாஹ் " என்ற வாசகத்தின் கருத்தாவது ..உண்மையில் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரம் தான் .( ஏனெனில் அவன்தான் தன்னை வணங்குபவர்களைப் படைத்து நிர்வகிப்பவன் . அவனையன்றி வணங்கப்படும் தெய்வங்கள் உண்மையில் வணக்கம் செலுத்தப்படுவதற்கு எவ்வித தகுதியும் அற்றவைகளே ..) ஆழமாக சிந்திக்கும் போது இவ்வுண்மை தெளிவாகும் . அவன்தான் சத்தியக் கடவுள் . ஏனைய அனைத்துக் கடவுள்களும் போலியானவைகளே ..

நபி முஹம்மது ( ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறைத்தூதர் என்பதன் கருத்தாவது ... அல்லாஹ் அவர்களைத் தனது தூதுவராகத் தெரிவு செய்துள்ளான் . எனவே அவர்கள் கூறிய விடயங்களை நாம் உண்மையென ஏற்க வேண்டும் . அவர்களது கட்டளைகளுக்கு செவி சாய்க்க வேண்டும் . அவர்கள் செய்யுமாறு ஏவியவைகளைச் செய்து அவர்கள் தடுத்தவற்றை முற்றாகத் தவிர்த்து வாழ வேண்டும் . அல்லாஹ்வை வணங்கி வழிபடும் போது கூட இவர்களது வழிகாட்டலின்படிதான் வணங்கி வழிபட வேண்டும் .

இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக்கோட்பாடு .

. 
# தொழுகை.

தொழுகை எனப்படுவது தினமும் ஐந்து தடவைகள் குறிப்பிட்ட ஐந்து நேரங்களில் புரியப்படும் ஒரு கட்டாய இறை வணக்கமாகும் . அல்லாஹ் மனிதனுக்குச் செய்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டும் , மனிதர்களுக்கு மத்தியில் பரஸ்பரம் அன்பும் ஒற்றுமையும் , அவர்களுக்கும் அல்லாஹ்வுக்கு மத்தியிலும் நெருக்கமான பிணைப்பும் உண்டாக வேண்டுமென்பதற்காக அல்லாஹ் தொழுகையை மனிதர்களுக்குக் கடமையாக்கியிருக்கின்றான்.

இத்தொழுகை மூலம் ஒரு முஸ்லிம் தன் இறைவனான அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்கிறான் . அவனிடம் தனது தேவைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறான் .அவ்வாறே தொழுகை ஒரு மனிதனை மானக்கேடான, வெறுக்கத்தக்க தீய செயல்களை விட்டும் தடுக்கின்றது . தொழுகையினை ஒரு மனிதன் நிறைவேற்றும் போது அதற்காக அவனுக்கு நன்மை கிடைக்கின்றது .அவனது ஈமான் முழுமை பெறுகின்றது . மேலும் பல நற்பயன்களும் அதன் மூலம் ஏற்படுகின்றன .

அவ்வாறே தொழுகையை நிறைவேற்றும் மனிதன் உடல் ரீதியாகவும் ஒருவித நிம்மதியினை அடைகின்றான் . அவனது உள்ளமும் அதன் மூலம் அமைதி

பெறுகின்றது . சுருங்கக் கூறின் ஒருமுஸ்லிம் இத் தொழுகை மூலம் பல்வேறு ஆத்மீக லௌகீக பயன்களைப் பெற்றுக் கொள்கிறான் .

இஸ்லாத்தின் மூன்றாம் அடிப்படைக் கோட்பாடு .

# ஸக்காத் .

ஸக்காத் என்பது ஒருவகை தர்ம அறவீடாகும் . தனவந்தர்களிடமிருந்து இது வருடாந்தம் அறவீடப்பட்டு வறியோர் , ஏழியோர் மற்றும் பணத்தேவை உள்ளோருக்குப் பகிர்ந்தளிக்கப்படும் . வறியோர் , வசதியற்றோரிடமிருற்து இது அறவீடப்பட மாட்டாது .

ஒரு மனிதனின் இஸ்லாமியக் கடமைகள் பூர்த்தியடைவதற்காகவும் , சிறந்த குணாதிசயங்கள் அவனிடம் குடிகொள்ள வேண்டுமென்பதற்காகவும் ,வறியோர் எளியோர்களது தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்
என்பதற்காகவும் இது வசதி படைத்த முஸ்லிம்கள் மீது மாத்திரம் கடமையாக்கப்பட்டுள்ளது .

அது மாத்திரமின்றி ஒரு தனவந்தன் இந்த ஸகாத்தைச் செலுத்துவதால் அவனது குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன . அவனும் அவனது பொருளாதாரமும் இயற்கை அழிவுகள் அனர்த்தங்களுக்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்

படுகின்றன .அத்துடன் வேறு பல பிரயோசனங்களும் இதனால் ஏற்படுகின்றன . அத்துடன் அவனிடமிருந்து அறவிடப்படும் தொகை கூட அவனது செல்வத்தில் மிகச் சிறியதொரு பகுதியே ..

இஸ்லாத்தின் நான்காவது அடிப்படை அம்சம் ..

# நோன்பு

நோன்பு எனப்படுவது பிறைக்கணக்கின் படி ஒன்பதாம் மாதமாகிய றமழான் மாதத்தில் பகல்ப் பொழுது முழுவதும் உண்ணாமல் குடிக்காமல் இன்னபல நோன்பை முறிக்கும் காரியங்கள் போன்றவற்றில் ஈடுபடுதலை அல்லாஹ்வுக்காகத் தவிர்ந்திருப்பதைக் குறிக்கும் . மேற்படி நோன்பு காலத்தில் உலக முஸ்லிம்கள் அனைவரும் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர்ந்து அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கின்றனர் . இதன் மூலம் ஒரு முஸ்லிமுக்கு அல்லாஹ்விடமிருந்து அளப்பெரிய பல பேறுகள் கிடைக்கின்றன . அவனது இறை நம்பிக்கை மேலும் வலுவடைகின்றது . அவனது குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன . இறைவனிடத்தில் அவனது அந்தஸ்த்து உயர்த்தப்படுகின்றது .

இது தவிர வேறு பல நன்மைகளும் நோன்பின் மூலம் ஒரு மனிதனுக்கு ஏற்படுகின்றன .

இஸ்லாத்தின் ஐந்தாவது அடிப்படைக் கோட்பாடு

# அல் ஹஜ் .

ஹஜ் எனப்படுவது மக்கா நகரிலுள்ள அல்லாஹ்வின்இல்லமாகிய க.:.பதுல்லாஹ்வை நோக்கி குறிப்பிட்ட ( துல்ஹஜ்) மாதத்தில் குறிப்பிட்ட சில வணக்கங்களை நிறைவேற்றுவதற்காக யாத்திரை மேற்கொள்வதைக் குறிக்கும் .

இவ்வணக்கத்தை அல்லாஹ் உடல் – பொருள் ரீதியாக சக்தி பெற்றோர்கள் மீது வாழ்நாளில் ஒரு தடவை மாத்திரம் கடமையாக்கியுள்ளான் .இவ்வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக வருடம் தோறும் பல லட்சம் மக்கள் புனித மக்கா நகரில் ஒன்று கூடுகின்றனர் அனைவரும் ஒரே இறைவனை வணங்கி , ஒரே வகை ஆடையுடன் காணப்படுகின்றனர் வெள்ளையர் – கறுப்பர் , ஏழை செல்வந்தர் , அரசன் – அடிமை போன்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைவரும் சகஜமாக ஒற்றுமையுடன் தமது வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுகின்றனர் .இவ்வணக்கங்களில் அரபா எனும் இடத்தில் தரித்து நிற்றல் ,க.:.பாவை ஏழு முறை தவாப் செய்தல் ( சுற்றுதல்) , ஸபா –மர்வா எனும் இரு இடங்களுக்கிடையில் ஓட்டமும் நடையுமாகச் செல்லுதல்

போன்றன முக்கியமான அம்சங்களாகும் . இந்த ஹஜ் வணக்கம் மூலம் அளவிட முடியாத ஆத்மீக ,உலகப் பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் .

இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படை

# இஹ்ஸான்.( மனத்தூய்மை).

" இஹ்ஸான் " எனப்படுவது மேற்கூறப்பட்ட இஸ்லாமிய , ஈமானிய கடமைகளை நாம் பின்பற்றி நாம் அல்லாஹ்வைக் காணாவிட்டாலும் அவன் எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் எனும் எண்ணத்துடன் உள சுத்தியாக இபாதத் – வணக்கம் புரிவதாகும் . எனவே இதற்கேற்ப நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் படி எமது வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் . அவர்களின் வழிகாட்டலுக்கு மாற்றமாக எதையும் செய்து விடக் கூடாது .

இவை அனைத்தையும் ஒன்றினைத்த ஒரு வாழ்க்கைத் திட்டத்திற்கே இஸ்லாமிய மார்க்கம் என்று சொல்லப்படும் . இந்த இஸ்லாம் மார்க்கமானது ஒவ்வொரு முஸ்லிமினதும் வாழ்க்கை முறையினையும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் சீர் செய்துள்ளமை இஸ்லாத்திற்கேயுரிய ஒரு தனிச் சிறப்பாகும் .இதைப் பின்பற்றி

ஒழுகுவதால் ஒரு மனிதன் தனது இருவுலக வாழ்க்கையிலும் வெற்றியடைய முடியுமென உறுதியாகக் கூற முடியும் .

மனிதனைத் திருமணம் செய்து கொள்ளுமாறு ஆர்வப்படுத்துகின்றது.வீபச்சாரம் போன்ற தீய செயல்களில் ஈடுபட வேண்டாமென அவனைத் தடுக்கின்றது . உறவினர் அயலகத்தாருடன் நல்ல முறையில் நடங்து கொள்ள வேண்டுமெனப் பணிக்கின்றது . வறியோர் ,எழியோருக்கு உதவ வேண்டுமெனக் கோருகின்றது .

நற்குண சீலனாக வாழ வேண்டுமெனப் பணிக்கின்றது .துர்க்குணங்கள் எதையும் நெருங்கக் கூடாதெனக் கோருகின்றது.அனுமதிக்கப்பட்ட முறையில் எவ்வளவும் போருளீட்டிக் கொள்ள அனுமதித்திருக்கும் இஸ்லாம் வட்டியினையும் அது சார்ந்த அனைத்து கொடுக்கல் –வாங்கல் நடவடிக்கைகளையும் தடைசெய்துள்ளது . வர்த்தகத்தில் மோசடி, ஏமாற்று , கலப்படம் ,போலி போன்ற அனைத்து துர் நடவடிக்கைகளையும் தடை செய்கின்றது .

இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவரிடத்திலும் அதனைப் பின்பற்றும் விதத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்க முடியும் . எனவே ஒரு முஸ்லிம் அரிதாக சிலவேளை ஏதேனும் தீய செயல்களில் ஈடுபட்டு விட வாய்ப்புண்டு. எனவே அவ்வாறாக வீபச்சாரம் , மதுவருந்தல், கொலை , களவு ,அவதூறு , சண்டைசச்சரவு போன்ற சில சமூக விரோத, மனித உரிமை மீறல் செயல்களில் ஒருவன் ஈடுபட்டு விடும் போது அதற்காக அவன் புரிந்த குற்றத்தின் தன்மைக்கேற்ப சிலதண்டனையியல் சட்டங்களையும் வகுத்து வைத்திருக்கின்றது .இத்தண்டனைகள் அவன் புரிந்த குற்றத்தின் விபரீதத்தைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது அவை மிகவும் நியாயமானதாகவே தென்படும் .இவற்றில் எவையுமே குற்றத்தின்

தன்மைக்கு ஒவ்வாத அதிக பட்ச தண்டனைகளாக அமைய வில்லை .

அவ்வாறே முஸ்லிம் பிரஜைகள் அனைவரும் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டுமென இஸ்லாம் போதிக்கின்றது . ஏனெனில் தலைமைக்கு எதிராகச் செயற்படுவதால் பல்வேறு விதமான பிளவுகளும் சமூக சீர்கேடுகளும் ஏற்பட வாய்ப்பிருப்பதால் தலைமைத்துவம் இஸ்லாமிய விரோதச் செயல் ஒன்றைச் செய்யலாமென வற்புறுத்தினாலேயன்றி ஏனைய சந்தர்ப்பங்களில் தலைமைத்துவத்திற்கு எதிராக செயற்படுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது .

சுருங்கக் கூறின் இஸ்லாமிய மார்க்கமானது சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காகப் பாடுபடுகின்றது .அல்லாஹ்வுக்கும் மனிதனுக்குமிடயில் சீரிய தொடர்பை ஏற்படுத்துகின்றது. மனிதனை அனைத்து விடயங்களிலும் தனது சமூக நலனுக்காக உழைக்கத் தூண்டுகின்றது .நற்குணங்கள் ,பண்புகள் , சீரிய செயல்கள் என்று எதுவெல்லாம் இருக்கின்றதோ அவை அனைத்தையுமே இஸ்லாம் மனிதனுக்குப் போதிக்கின்றது .சமூக சீர்கேடுகள் , தீமைகள் ,துர்க்குணங்கள் அனைத்தை விட்டும் சமூகத்தைத் தடுக்கின்றது .அவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றது .

இவை அனைத்தையும் வைத்து நோக்கும் போது இஸ்லாமிய மார்க்கம் மாத்திரமே பூரணமான, நடைமுறைக்கேற்ற, இலகுவான வாழ்க்கைத் திட்டம் என்பது நடுநிலையாகச் சிந்திக்கும் போது தெளிவாகப் புலப்படும்.

எனவே இஸ்லாத்தை ஏற்றிடுவோம் – அதனைப் படித்திடுவோம் – அதன் வழி நடந்திடுவோம் .

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே

அல்ஹம்து லில்லாஹ்

வஸ்ஸலாம் .